பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**12 03 2026** **6 45**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** உள்நாட்டு சமையல் எரிவாயு உற்பத்தி 25 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**2.** சமையல் எரிவாயு சிலிண்டர் முறையாக விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேச அரசுகளை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

**3.** தமிழ்நாட்டில் வீடு, வணிகம் மற்றும் தொழில்துறை நுகர்வோருக்கு தடையற்ற எரிவாயு சிலிண்டர் விநியோகம் செய்வதை உறுதி செய்றுமாறு மத்திய அரசை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

**4.** மகளிருக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் அவர்களுக்கு தன்னம்பிக்கை, சுயமரியாதை மற்றும் பொருளாதார சுதந்திரத்தை அளிப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

**5.** ஸ்விஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ், தருண் மணப்பள்ளி ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவி வரும் சூழலுக்கிடையே மத்திய அரசின் தயார் நிலை குறித்து அமைச்சரவை நிலையிலான அதிகாரிகள் நேற்று விளக்கமளித்தனர்.

புதுதில்லியில் இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச் செயலாளர் திருமதி சுஜாதா சர்மா, உள்நாட்டு சமையல் எரிவாயு உற்பத்தி 25 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

உள்நாட்டு உற்பத்தியைப் பொறுத்தவரை வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும், இது இரண்டரை நாட்களில் விநியோகம் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

எனவே பொதுமக்கள் தேவையின்றி பதற்றம் அடைய வேண்டாம் என்றும் பெட்ரோலியத்துறை இணை செயலாளர் கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், மேற்காசிய மற்றும் வளைகுடா நாடுகளில்

வசிக்கும் இந்தியர்களின் நலன் குறித்து மத்திய அரசு அக்கறை கொண்டுள்ளதாக கூறினார்.

வணிக கப்பல் தாக்கப்பட்டதில் இந்தியர்கள் இரண்டு பேர் உயிரிழந்ததாகவும், ஒருவரைக் காணவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வளைகுடா பிராந்தியத்தில் காயமடைந்த இந்தியர்கள் சிலருக்கு சிகிச்சை அளிக்கப்படுவதாகவும், அவர்களுடன் தூதரகம் தொடர்பில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பின்னர் பேசிய கப்பல் போக்குவரத்துத்துறை சிறப்பு செயலாளர் திரு. **Rajesh Kumar Sinha**, பாரசீக வளைகுடா பகுதியில் **28** இந்திய கப்பல்களும், அதில் **778** இந்தியர்கள் தற்போது இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த கப்பல்களில் உள்ளவர்களின் பாதுகாப்பு குறித்து அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் கூறினார்.

அவர்களுடைய பாதுகாப்பு மற்றும் மருத்துவ உதவிகளுக்காக கப்பல் மேலாளர்கள், பணியாளர் தேர்வு முகமைகள் ஆகியவை இந்திய தூதரகங்கள் மற்றும் உள்ளூர் நிர்வாகங்களுடன் இணைந்து செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நாடு முழுவதும் துறைமுக செயல்பாடுகள் சீராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஏற்றுமதியாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் களையும் வகையில் தேவையான அனைத்து உதவிகளை வழங்குமாறும், ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்யுமாறும் துறைமுக நிர்வாகங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக துறைமுகத்துறை சிறப்புச் செயலாளர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

சமையல் எரிவாயு சிலிண்டர் முறையாக விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேச அரசுகளை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக புதுதில்லியில் மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேச அரசுகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் காவல்துறை தலைவர்களுடன் உள்துறை செயலாளர் திரு. **Govind Mohan** விவாதித்தார்.

அப்போது மேற்காசியாவில் நிலவும் சூழல் காரணமாக நாட்டில் நிலவி வரும் சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோக கட்டமைப்பு, பணியாளர்களுக்கு பாதுகாப்பை அளிப்பதன் மூலம் எரிவாயு விநியோகத்திற்கான பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அப்போது அவர் கேட்டுக்கொண்டார்.

நாள்தோறும் இந்த விநியோகத்தை கண்காணிக்குமாறும் விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தினார்.

சமையல் எரிவாயு சிலிண்டர் பற்றாக்குறை தொடர்பாக பரவும் அச்சத்தை போக்கும் வகையில் எண்ணெய் சந்தை நிறுவனங்கள் மூலமும், நேரடியாகவும் போதுமான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேச அரசுகளுக்கு உடனடி தகவல்களை வழங்குவதற்காக தகவல் ஒலிபரப்பு மற்றும் பெட்ரோலிய அமைச்சக அதிகாரிகள் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ள **24** மணி நேர கட்டுப்பாட்டு அறை உள்துறை

அமைச்சகத்தின் சார்பில் இயங்கி வருவதாகவும் உள்துறை செயலாளர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் வீடு, வணிகம் மற்றும் தொழில்துறை நுகர்வோருக்கு தடையற்ற எரிவாயு சிலிண்டர் விநியோகம் செய்வதை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

உணவகங்கள், தொழில்துறை நிறுவனங்கள் பெரும்பாலும் தங்கள் செயல்பாடுகளுக்கு LPG விநியோகத்தையே சார்ந்துள்ள நிலையில் அதற்கான விநியோக நிறுத்தம், அவர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

மாற்று எரிபொருளுக்கு அதிக காலமும், கணிசமான செலவும் ஏற்படும் என்பதால் அவர்களுக்கு தடையற்ற LPG விநியோகம் செய்வதை உறுதி செய்ய அமைச்சகம் மற்றும் எண்ணெய் நிறுவனங்களுக்கு உத்தரவிடுமாறு பிரதமரை கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த நெருக்கடியை சமாளிக்க மத்திய அரசு மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் தமிழக அரசு துணை நின்று ஆதரவளிக்கும் என்றும் முதலமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி, எரிசக்தி துறை அமைச்சர் திரு. மனோகர் லால் ஆகியோருக்கும் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

மின் உற்பத்தி நிலையங்களுக்கு எரிவாயு ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளதை மறு பரிசீலனை செய்யுமாறு அவர் அந்த கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக ஹோட்டல்கள், தொழில்துறை நிறுவனங்கள் உள்ளிட்டவை அந்தப் பயன்பாட்டில் இருந்து மின்சார பயன்பாட்டுக்கு மாறுவதற்கான வாய்ப்புள்ளதால் மின்சார தேவை அதிகரிக்கக் கூடும் என்றும், எனவே எரிவாயு அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையங்களின் மின் கட்டமைப்பு சமநிலை ஆதரவை வழங்க வேண்டியது அவசியம் என்றும் முதலமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் 25 நாட்களுக்குத் தேவையான சமையல் எரிவாயு சிலிண்டர்கள் போதுமான அளவில் உள்ளதாக எண்ணெய் நிறுவன பிரதிநிதிகள் தெரிவித்துள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தலைமையில் நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின்போது அவர்கள் இதனைத் தெரிவித்ததாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மகளிருக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் அவர்களுக்கு தன்னம்பிக்கை, சுயமரியாதை மற்றும் பொருளாதார சுதந்திரத்தை அளிப்பதாக மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் நடைபெற்ற மகளிர் தினவிழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், பெண்கள் தங்களுக்கு கிடைத்துள்ள உரிமைகளையும், வாய்ப்புகளையும், திட்டங்களையும் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

அமெரிக்கா, இஸ்ரேல் நடத்தி வரும் வான்வழித் தாக்குதலில் ஈரானில் 19 ஆயிரத்துக்கும் அதிகமான குடியிருப்புகள் சேதமைடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

------------

சர்வதேச எரிசக்தி முகமை அவசர கால எண்ணெய் இருப்பில் இருந்து 400 பில்லியன் பேரல் எண்ணெயை விடுவிக்க முடிவு செய்துள்ளதற்கு இந்திய வரவேற்பு தெரிவித்துள்ளது.

------------

கத்தாரில் இருந்து 500க்கும் மேற்பட்ட இந்தியர்கள் நேற்றிரவு புதுதில்லி மற்றும் இதர பகுதிகளுக்கு வந்து சேர்ந்ததாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

------------

தெலங்கானாவில் நடப்பு ரபி பருவத்தில் பயிர்கள் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

------------

சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் சென்னை அருகே பல்லாவரம், அனகாபுத்தூர் மற்றும் சேலம், பெருந்துறை, விழுப்புரம், திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் துணை ராணுவப் படையினர் கொடி அணிவகுப்பு பேரணி நடத்தினர்.

------------

வேலூர் மாவட்டத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு கூடுதல் கட்டணம் வசூலித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி எச்சரித்துள்ளார்.

------------

கோவை மாவட்டத்தில் காவல்துறை சேவையை **Whatsapp Chat Bot** மூலம் பெறும் வகையில் “Kovai Digi Cop” என்ற சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

------------

திருவாரூர் மாவட்டம் சித்தமல்லி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் பணிகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண் இயக்குநர் திரு. அண்ணாதுரை ஆய்வு செய்தார்.

------------

சென்னை ஈக்காட்டுத்தாங்கலில் உள்ள தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் திருமண புகைப்படம் மற்றும் வீடியோ எடிட்டிங் குறித்த பயிற்சி இம்மாதம் 23ஆம் தேதி முதல் 5 நாட்கள் நடைபெற உள்ளது.

------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஸ்விஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ், தருண் மணப்பள்ளி ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் கிரண் ஜார்ஜ் 23-21, 21-19 என்ற செட் கணக்கில் சிங்கப்பூரின் Kean Yew Loh-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் தருண் மணப்பள்ளி - ஜப்பானின் Kento Nishimoto-ஐ வென்றார்.

-------------

**ருவாண்டாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தாந்த் பாந்தியா - பல்கேரியாவின் Alexander Donski இணை காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.**

**<<<<The End>>>>**